ShareLife

நற்செய்தியை வாழ்தல்
2018 பங்குத்தள பரப்புரை
ஷேர்லைப் ஞாயிறு நிதி சேர்ப்பு
மார்ச் 18, ஏப்பிரல் 22, மே 27

உங்கள் பங்கினை அல்லது ஷேர்லைப் அலுவலகத்தைத் தொடர்பு கொள்க
416-934-3411 1-800-263-2595
sharelife.org

ஷேர்லைப் தகவல்தாள் உள்ளீடு

2018இல் ஷேர்லைப்இன் பங்குத்தள பிரச்சாரத்திற்கு ஆதரவளிப்பதன் முக்கியத்துவம் பற்றிய விழிப்புணர்வை உருவாக்க உதவியாக உங்கள் வாராந்த தகவல்தாளினுள் இந்த அறிவிப்புகளை சேர்க்கவும்.

இவை வன்பொருளாகக் கிடைக்காது என்பதை நினைவில் கொள்க. எல்லா தகவல்தாள் அறிவிப்புக்களையும் எமது வலைத்தளத்தில் பெறமுடியும். பிரெஞ்சு, இத்தாலியன், கொரியன், போலிஷ், போர்த்துக்கேயம், ஸ்பானிஷ், தமிழ், வியட்நாமிஸ், சீனம் (இலகுவானதும் மரபார்ந்ததும்) ஆன பல் மொழிகளில் பெயர்க்கப்பட்ட பதிப்புகளை இங்கு காணலாம்
sharelife.org/Public/Resources

ஷேர்லைப் வழியாக “நற்செய்தியை வாழ்வதற்கு” எமது நன்றி!

*கிறிஸ் டிமிற்றேன்கொ*
*தொடர்பாடல் முகாமையாளர*

*வாராந்த அறிவிப்புக்களுடன் தவக்கால முதல் ஞாயிறு துவக்கம் ஜனவரி மற்றும் பெப்ரவரி மாதங்களில் (மாதம் ஒரு முறை) வழங்குவதற்கான அறிவித்தல்களும் இங்கு இணைக்கப்பட்டுள்ளன.*

பெப்ரவரி 2018
(பெப்ரவரி 4 அல்லது 11 மட்டும்)

துயரப்படுவோருக்கு ஆறுதல் தந்து நற்செய்தியை வாழ்தல்

ஆழ்ந்த மனச்சோர்வினை உணர்ந்த தெரேசா, சிம்கோ சிறுநகரின் கத்தோலிக்க குடும்ப சேவைகளால் வழங்கப்பட்ட ஒரு உளவள (கவுன்சிலிங்) கிளினிக்கில் கலந்து கொண்டார். பத்து ஆண்டுகளுக்கு முன்பு தனது குடும்பத்தில் ஏற்பட்ட பல சோக உயிர் இழப்புகளின் பின்பு இந்த அறிகுறிகள் தனக்குள் தொடங்கியது என தெரேசா கூறினார். துயரம் இன்னமும் அவளை எவ்வாறு பாதிக்கின்றது என்பதை அவள் புரிந்து கொள்ள உளநல மருத்துவர் உதவினார். அவருடன் சேர்ந்து கூடுதல் சேவைகளை பெறுவதற்கு ஒரு திட்டத்தை அவர்கள் உருவாக்கினர். தன் மன அழுத்தத்தை வெல்ல முடியும் என்பதனை அமர்வின் முடிவில் முதல் தடவையாக தெரேசா உணர்ந்தார். தெரேசா போன்றவர்கள் தமது வாழ்வில் மீண்டும் மகிழ்ச்சியைப் பெற ஷேர்லைப்இன் நிதிபெறும் நிலையங்கள் உதவுகின்றன.

ஷேர்லைப்பிற்கு உதவுவதற்கு மனமார்ந்த நன்றி

ஷேர்லைப்பின் பங்குத்தள பரப்புரை
பெப்ரவரி 18 முதல் யூன் 24, 2018

தவக் காலத்தின் முதல் ஞாயிறு
பெப்ரவரி, 18, 2018

ஷேர்லைப் முகவர்களுக்கு உதவுவதால் நற்செய்தியை வாழ்தல்

“எங்கள் ஷேர்லைப் பிரச்சாரத்தை ஆரம்பிக்கும்போது நாம் செய்யும் அனைத்திலும் “நற்செய்தியை வாழ” ஊக்குவிக்கப்படுகின்றோம். எவ்வாறு நாம் இதனை எமது சமூகத்தில் காண்பிக்கலாம்? தனியாய் வாழும் தாய்மார்கள் புதிதாகப் பிறந்த குழந்தையைக் கவனிக்க உதவுதல் அல்லது சிரமங்களை எதிர்கொள்ளும் குடும்பங்களுக்கு உதவுதல் அல்லது அகதிகள் குடும்பங்களை எங்கள் சமூகத்திற்கு வரவேற்றல் போன்றவையால் நற்செய்தியை வாழலாம். 41 வருடங்களுக்கும் மேலாக ஏராளமான தனியர்கள் எங்கள் நிறுவனங்களால் வழங்கப்பட்ட இந்த பரிவுணர்வை பெற்றுள்ளனர். இந்த தவக்காலத்தில் எங்கள் மறைமாவட்டத்தின் வருடாந்த நிதிக்கோரிக்கைக்கு ஆதரவு கொடுங்கள்”

*-தோமஸ் கார்டினல் கொலின்ஸ்*
*ரொரோண்டோ மறைமாவட்ட பேராயர்*

ஷேர்லைப் ஞாயிறு மார்ச் 18
தயவு செய்து தாராளமாகக் கொடுங்கள்

தவக்காலத்தின் இரண்டாம் ஞாயிறு
பெப்ரவரி 25, 2018

அழைத்தலுக்கு ஆதரிப்பதன் மூலம் நற்செய்தியை வாழ்தல்

“புனித அகுஸ்தினார் குருமடத்தில் வாழ்ந்ததும் கற்றதும் எனக்குக் கிடைத்த பெரிய ஆசீர்வாதம்” என்று அகுஸ்தினார் குருமடம் மற்றும் அதன் இணைவளாகத்திலுள்ள மீட்பரின் அன்னை குருமடம் ஆதியனவில் பயிற்சி பெறும் 80 குருமாணவர்களில் ஒருவரான மத்தேயு குண்ணர்ஸன் கூறுகிறார். “ஷேர்லைப் இன் நன்கொடையாளர்களின் தாராளமான ஆதரவு இல்லாமல் குருமடம் இயங்க முடியாது” என்றும் குறிப்பிட்டார். ஷேர்லைப்ஜ ஆதரப்பதன் மூலம் நமது எதிர்கால குருக்கள் கடவுளின் அழைப்புக்கு பதில் தர நீங்கள் உதவுகின்றீர்கள்.

*ஷேர்லைப் ஞாயிறு மார்ச் 18*
*தயவு செய்து தாராளமாக கொடுங்கள்*

தவக்காலத்தின் மூன்றாம் ஞாயிறு
மார்ச் 4, 2018
வீடு அற்ற இளையோருக்கு உதவுவதன் மூலம் நற்செய்தியில் வாழ்தல்

எந்த ஒரு இரவிலும் கனேடிய மக்களுள் 16லிருந்து 24 வரையான வயதுடைய 6,000 பேர்களுக்கு வீடு என அழைப்பதற்கு ஒரு இடமில்லை. மொத்த வீடற்ற மக்கள் தொகையில் இது 20 சதவீதத்தையே பிரதிபலிக்கின்றது.

ரொரோண்டோவின் தெருக்களில் வீடற்ற இளைஞரின் வாழ்வில் ஷேர்லைப் இன் ஆதரவில் கவனன்ட் ஹவுஸ்இன் ரைட் ஒப் பசேச் திட்டம் ஒரு சரிநிகரான வித்தியாசத்தை ஏற்படுத்தியுள்ளது. இந்த திட்டம் இளைஞர்களையும் வழிகாட்டிகளையும் இணைத்து இளைஞரின் வாழ்வாதார திறமைகளை வளர்க்கின்றது. ஷேர்லைப்க்கு ஆதரவளிப்பதன் வழியாக ஆபத்தில் உள்ள இளைஞர்களுக்கு தங்களின் சொந்த வாழ்க்கையைத் தெரிய நீங்கள் உதவுகிறீர்கள்.

*ஷேர்லைப் ஞாயிறு மார்ச் 18*
*தயவு செய்து தாராளமாகக் கொடுங்கள்*

---

தவக்காலத்தின் நான்காம் ஞாயிறு
மார்ச் 11, 2018

ஷேர்லைப்வுக்கு ஆதரவு வழங்கி நற்செய்தியை வாழ்தல்

நம் அன்றாட வாழ்க்கை ஓய்வற்றதாக இருக்கும்போது மற்றவர்களுடன் எப்படி “நற்செய்தியை வாழ” முடியும்? சிலருக்கு அது ஒரு சூப் சமையலறையில் தன்னார்வத் தொண்டு செய்வது அல்லது ஒரு வயதான உறவினரைப் பராமரிப்பதாகும். எமக்கு நிறைவாகப் பங்கேற்க நேரம் இல்லை என்றால், நம் சமூகத்தில் உள்ள பல ஷேர்லைப் நிதிப்பெறு நிறுவனங்களுடன் இணைந்து அவர்களின் தேவைகளில் கிறிஸ்துவின் கைகளை கொண்டுவருவதாகும்.
அடுத்த ஞாயிறு பங்குகளில் ஷேர்லைப் முதல் சேகரிப்பு இடம் பெறும். அடுத்து வரும் வாரங்களில் கத்தோலிக்க முகவர்களுக்கு உதவுவதன் வழியாக எப்படி “நற்செய்தியை வாழமுடியும்” என சிந்தித்து உங்கள் பங்கின் ஷேர்லைப் பிரச்சாரத்திற்கு ஆதரவாக ஒரு முடிவை எடுக்கவும்.

*அடுத்த ஷேர்லைப் ஞாயிறு மார்ச் 18*
*தயவு செய்து தாராளமாகக் கொடுங்கள்*

---

தவக்காலத்தின் ஐந்தாம் ஞாயிறு
ஷேர்லைப் ஞாயிறு மார்ச் 18

உள்ளூர் முதல் உலகம் வரை நற்செய்தியை வாழ்தல்.
“எங்கள் சமூகத்திலும் மற்றும் உலகெங்கிலும் உள்ள ஓரங்கட்டப்பட்ட மக்களின் தேவைகளை நிறைவாக்க “ஷேர்லைப் இன் விண்ணப்பத்தை ஆதரிப்பது அவசியம். சில நேரங்களில் அவை கண்ணுக்கு தெரியாதவை. ஆனால் எப்பொழுதும் இவர்கள் உதவிபெறும் மக்களின் வாழ்வில் ஒரு உறுதியான மாறுபாடு செய்கிறார்கள். தயவு செய்து ஷேர்லைப் ஞாயிறு ஆகிய இன்று நீங்கள் எப்படி உதவ முடியும் என்பதைப் பற்றி சிந்தியுங்கள்.”

*தோமஸ் கார்டினல் கொலின்ஸ்*
*ரொரோண்டோ மறைமாவட்ட பேராயர்*

இன்று ஷேர்லைப் ஞாயிறு
ஷேர்லைப்பிற்கு உதவுவதற்கு மனமார்ந்த நன்றி

குருத்து ஞாயிறு
மார்ச் 25, 2018

செவித்திறன் குன்றிய சமூக்தை தாங்குவதன் வழியாய் நற்செய்தியை வாழ்தல்

நீங்கள் செவிப்புலனற்ற ஒரு குழந்தை எனக் கற்பனை செய்து பாருங்கள், உங்கள் பெற்றோர் சகோதரர் சைகை மொழி தெரியாதவர்கள். உங்கள் பெற்றோருக்கு மிக அடிப்படையான வழி தெரியலாம். ஆனால் உங்கள் மகிழ்ச்சி, அச்சம் மற்றும் தேவைகளை நீங்கள் எவ்வாறு பகிர்வீர்கள்? அமைதிக் குரல் என்ற அமெரிக்க சைகை மொழி மற்றும் செவிப்புலனற்ற கலாச்சார குடும்பங்களுக்கு கற்றுக்கொடுக்க உதவுகின்றது. எனவே அவர்கள் ஒரு பொதுவான மொழியை பகிர்ந்து கொள்ளலாம். ஒரு அமைதியான பெற்றோர் பின்வருமாறு கூறுகிறார்: "சைலண்ட் குரல் பற்றி நான் மிகவும் உணர்ச்சிவசப்படுகிறேன், ஏனென்றால் அவர்களது குடும்ப தகவல் தொடர்பு திட்டம் சமூகத் தனிமைப்படுதலில் இருந்து குழந்தைகளை விடுவிக்கிறது." கடந்த ஆண்டு 750க்கும் மேற்பட்ட காது கேளாத குழந்தைகளுக்கும் பெரியவர்களுக்கும் சைலண்ட் வாய்ஸில் உள்ள ஷேர்லைவ் -ஆதரவு திட்டங்கள் மூலம் உதவி கிடைத்தது.

*அடுத்த ஷேர்லைப் ஞாயிறு ஏப்பிரல் 22*
*தயவு செய்து தாராளமாக கொடுங்கள்*

உயிர்ப்பு ஞாயிறு
ஏப்பிரல் 1, 2018

நமது இறை நம்பிக்கையை உலக நாடுகளுக்கு பறைசாற்றுவதன் வழியாக நற்செய்தியை வாழ்தல்

வியட்நாமில் உள்ள Xuan Loc குவான் லோக் மலைப்பகுதியில் கியா லாழ என்ற பங்கு உண்டு. இப்பங்கு மக்கள் மலைப்பகுதி பண்ணைகளில் வேலை செய்யும் மிக ஏழைகள். எமது மறைப்பணி நிதியம், ஷேர்லைப் இன் ஆதரவுடன் ஒருமுறைக்கான மானியம் அளித்ததால் இப்பங்கு வேறு வழியாகப் பெற முடியாத ஆதரவைப் பெற்றது. விவிலிய நூல், திருப்பாடல்கள், திருமண தயாரிப்பு வகுப்புக்களை நடத்தும் 60 மறையாசிரியர் பயிற்சி போன்றவை உங்கள் ஆதரவோடு வழங்கப்பட்டது. இதனால் கியா லாழ என்ற கோவில் உலகில் ஒரு சமூகத்திற்கு விசுவாசத்தை வளர்த்து வருகின்றது.

*அடுத்த ஷேர்லைப் ஞாயிறு ஏப்பிரல் 22*
*தயவு செய்து தாராளமாக கொடுங்கள்*

உயிர்ப்பின் இரண்டாம் ஞாயிறு
ஏப்பிரல் 8, 2018

விரைவான மனநல சுகாதார சேவைகள் வழங்குவதன் மூலம் நற்செய்தியை வாழ்தல்

விரைவான பரிகாரம் தேடவில்லை என்றால் மனநல பிரச்சினைகள் அதிகரிக்கலாம். எனவே தான் டொரோண்டோ மறைமாவட்டத்தில் ஐந்து கத்தோலிக்க குடும்ப சேவைகள் முகவர் தற்போது உடன் வருகை உளவள ஆலோசனைகளை அளிக்கின்றது. இந்த முன்முயற்சியால் பெரும்பாலும் நீண்ட கால ஆலோசனை வழங்காமல் தேவைநாடிகளின் பிரச்சனைகளுக்கு உதவ முடியும். தங்கள் பிரச்சினைகளை பின்பு தேவைநாடிகளே சமாளிக்க முடியும் என்ற கணிசமான நம்பிக்கையை அவர்களே தெரிவிக்கின்றனர். ஷேர்லைப்க்கு ஆதரவளிப்பதன் மூலம் நெருக்கடியில் உள்ளவர்களுக்கு நம்பிக்கையை மீண்டும் வழங்க நீங்கள் உதவுகிறீர்கள்.

*அடுத்த ஷேர்லைப் ஞாயிறு ஏப்பிரல் 22*
*தயவு செய்து தாராளமாக கொடுங்கள்*

உயிர்ப்பின் மூன்றாம் ஞாயிறு
ஏப்பிரல் 15, 2018

போதைகளுக்கு அடிமையாக இருப்பவர்களுக்கு உதவுவதன் மூலம் நற்செய்தியை வாழுதல்

குழந்தை பருவத்தில் துஷ்பிரயோக வடுவுடைய ஆண்ட்ரூ பதின் வயதில் கடும் போதை வஸ்துகளுக்கு அடிமையாகினான். அடுத்த 20 ஆண்டுகளும் சிறை மற்றும் மருத்துவமனையிலேயே கழிந்தது. இறுதியாக அவர் புனித மைக்கேல் ஹோம்ற்கு வந்தார். இது ஒரு ஷேர்லைப் நிதிபெறும் நிறுவனம். போதைப் பொருள் பாவனையால் பாதிக்கப்பட்டவர்களுக்கு மறுவாழ்வுத் திட்டத்தை இது வழங்குகிறது. இப்போது நியதியான மகிழ்ச்சியாக மற்றும் சமாளிக்கும் திறன்மிக்க ஒருவராக ஆண்ட்ரூ ஒரு புதிய வாழ்க்கையை ஆரம்பித்துள்ளார். ஷேர்லைப்க்கு ஆதரவளிப்பதன் மூலம் நீங்கள் ஆண்ட்ரூ போன்றவர்கள் தங்கள் வாழ்க்கையை மீண்டும் சரியான பாதையில் பெற உதவுகிறீர்கள்.

*அடுத்த ஷேர்லைப் ஞாயிறு ஏப்பிரல் 22*
*தயவு செய்து தாராளமாகக் கொடுங்கள்*

---

உயிர்ப்பின் நான்காம் ஞாயிறு
ஷேர்லைப்பின் இரண்டாம் ஞாயிறு
ஏப்பிரல் 22, 2018

தேவையில் இருப்போருக்கு கொடுத்து
உதவுவதன் வழியாக நற்செய்தியை வாழ்தல்

நீதியும் அன்பும் வெளிப்படும் கத்தோலிக்க பண்பு எங்கள் மேய்ப்புப்பணித் திட்டத்தின் முக்கிய கூறுபாடு ஆகும். கத்தோலிக்க சமுதாயமாகிய நாம் எமது சமூகங்களில் இயேசுவின் கைகளாகவும் முகமாகவும் வாழ அழைக்கப்படுகின்றோம்.

“நான் உங்களை நேசித்ததுபோல நீங்களும் ஒருவரிலொருவர் அன்பாயிருக்க வேண்டும்” என்பதனை ஷேர்லைப்க்கு பங்குமக்களாகிய நீங்கள் அனைவரும் வழங்கும் தியாகமுள்ள உங்கள் கொடையினால் திருச்சபையின் மறைப் பணியில் பங்குபெற அழைக்கிறேன்.
- *தோமஸ் கார்டினல் கொலின்ஸ்*
*ரொரோண்டோ மறைமாவட்ட பேராயர்*
இன்று ஷேர்லைப் ஞாயிறு
உங்கள் தாராள உதவிக்கு நன்றி

---

உயிர்ப்பின் ஐந்தாம் ஞாயிறு
ஏப்பிரல் 29, 2018

கனடாவின் புதுவரவாளர்களுக்கு உதவுவதன் மூலம் நற்செய்தியை வாழ்தல்

கணனி வலைத்தளததில் சந்தித்த ஒருவரை மணக்க அன்ஞ்சி என்பவர் கனடாவிற்கு வந்தார். இவள் நினைத்தவர் போல் அவர் இருக்கவில்லை. அவர் உணர்ச்சி ரீதியிலும் மற்றும் உடல் ரீதியாகவும் துஷ்பிரயோகத்தை அனுபவித்தார். அவர் வேலைக்கு சென்ற சமயத்தில் கத்தோலிக்க கலாச்சார சேவைகள் (CCS) நடத்தும் மொழிக்கல்வி வகுப்புகளில் கலந்து கொண்டார். அங்குள்ள ஊழியர்கள் ஒரு குடியேற்ற பணியாளருடன் தொடர்பு கொண்டு பெண்களுக்கான ஒரு செயல்முறைத் திட்டத்தில் அறிமுகம் செய்தனர். அவளுடைய வன்முறைமிக்க உறவை விட்டு வெளியேறவும் துஷ்பிரயோகத்தில் இருந்து விடுதலையாகவும் சுயாதீனமாக வாழ்வதற்கும் அவளுக்கு ஆதரவு கிடைத்தது. ஷேர்லைப் வருடாவருடம் உதவித் தொகை வழங்கி வரும் CCS நிறுவனத்தின் 3,000 வாடிக்கையாளர்களுள் அன்ஞ்சியும் ஒருவர்.

அடுத்த ஷேர்லைப் ஞாயிறு மே 27
தயவு செய்து தாராளமாகக் கொடுங்கள்

உயிர்ப்பின் ஆறாம் ஞாயிறு
மே 6, 2018

முதியவர்களை பராமரிப்பதன் மூலம் நற்செய்தியை வாழ்தல்

பக்கவாதநோய் ஏற்பட்டதிலிருந்து எரிக்காவின் இயக்கம் குன்றியது. பல செயல்களையும் செய்து மகிழ முடியவில்லை. LA செயல் வாழ்வு மையம் உள்ளிப்பூண்டு விழாவிற்கு ஒரு பயணத்தைத் திட்டமிட்டபோது தனது குறைபாடுகள் குறுக்கிடும் என்று எரிக்கா கவலையுற்றார். ஷேர்லைப்பின் நிதிபெறும் ஒரு நிறுவனம் இவரது பயணத்திற்கு முழுமையாக ஆசரணை செய்யலாம் என உறுதி செய்தது பல வருடங்கள் அனுபவிக்காத மகிழ்ச்சியை தான் அடைந்தமை தனது குறைபாடுகள் மறைந்துபோனதுபோல் அவள் உணர்ந்தாள். கடந்த ஆண்டு ஷேர்லைப்பின் உதவி பெறும் நிறுவனங்கள் 6,300க்கு மேற்பட்ட மூதியோர்க்கு பராமரிப்பு வழங்கினார்கள்.

*அடுத்த ஷேர்லைப் ஞாயிறு மே 27*
*தயவு செய்து தாராளமாகக் கொடுங்கள்*

இயேசுவின் உருமாற்ற ஞாயிறு
மே 13. 2018

மனநல ஆரோக்கியத்துக்கு ஆதரவு அளித்து நற்செய்தியை வாழ்தல்

2016 ஆம் ஆண்டில், 2000க்கும் அதிகமானோர் தனியர்களும், திருமண ஜோடிகளும் குடும்ப உளவள ஆலோசனைகளுக்காக ஷேர்லைப் நிதிபெறும் பீல் டஃபெரின் கத்தோலிக்க குடும்ப சேவைகள் நிறுவனத்தை உதவிக்காக அணுகினர். அதிகமானோர் மன அழுத்தத்தை குறைக்க உதவி தேடினர். வேலைக்கு செல்லாமல் இருப்பதற்கு முதுகு நோயைவிட மனஅழுத்தம் முதல் நிலையில் உண்டு. இந்த சேவைகள் வாடிக்கையாளர்களுக்கு வேலைவாய்ப்பை தக்க வைத்துக் கொள்ளவும் வறுமையிலிருந்து வெளிவரவும் உதவுகின்றன. CFS போன்ற ஷேர்லைப் முகவர்களுக்கு உதவுவதன் மூலம், நீங்கள் மக்கள் சுகாதாரத்தையும் மகிழ்ச்சியையும் பெற உதவுகிறீர்கள்.

*அடுத்த ஷேர்லைப் ஞாயிறு மே 27*
*தயவு செய்து தாராளமாகக் கொடுங்கள்*

தூய ஆவியின் ஞாயிறு
ஷேர்லைப்பின் மூன்றாம் ஞாயிறு
மே 20, 2018

உங்கள் நன்கொடையின் தாக்கத்தை அதிகரிப்பதன் மூலம் நற்செய்தியை வாழ்தல்

செயின்ட் எலிசபெத் சுகபராமரிப்பு நிலையத்தால் நிர்வகிக்கப்படும், பகிரப்பட்ட சேவைகள் முன்முயற்சியின் மனிதவள, நிதிவள, தகவல் தொழில்நுட்பம் பகுதிகளுக்கென ஷேர்லைப்பினால் உதவி அளிக்கப்பட்டது. இதில் பங்குபற்றும் நிறுவனங்கள் தங்கள் பணியின் தரம், திறமை மற்றும் துல்லியத்தன்மையை மேம்படுத்தலாம் என்று தெரிவித்தனர். இந்த முன்முயற்சியால், ஷேர்லைப்பிடம் நிதிபெற்ற முகவர்கள், தமக்கு வழங்கப்படும் அதிகபட்ச தொகையை முதன்மையான சேவைகளுக்கு தாம் நேரடியாவே அனுப்புவதாக உறுதிப்படுத்துகின்றன.

*அடுத்த ஷேர்லைப் ஞாயிறு மே 27*
*தயவு செய்து தாராளமாகக் கொடுங்கள*

மூவொரு கடவுள் ஞாயிறு
மே 27, 2018

இளம் குடும்பங்கள் வெற்றிபெற உதவுவதில் நற்செய்தியில் வாழ்தல்

கமிலாவும் அவரது மகளும் குடும்பத்தில் இருந்து துரத்தப்பட்டபோது ரோஸ் ஆ.்.ப் ஷரோன் வழங்கும் இளம் தாய்மார்களுக்கான சேவை நிகழ்ச்சித் திட்டங்களில் அவர் கலந்து கொண்டார். ஆலோசகர்கள் அவருக்கு ஏற்ற ஒரு தொடர்மாடி தேட உதவும்போது அவர் இரண்டாவது முறையாக கர்ப்பமாகினார். இந்த சவால்களுக்கு மத்தியிலும் ரோஸ் ஆ.்.ப் ஷரோன் வழங்கும் அத்தனை நிகழ்ச்சிகளிலும் கமிலா கலந்து கொண்டார் ஆண்டு முடிவில் தானும் தனது பிள்ளைகளும் விரும்பும் வாழ்க்கை அடைய ஒரு திட்டத்தை கொண்ட வலுவான ஒரு பெண்ணாக அவர் வெளியே வந்தார். கடந்த வருடம் இளம் தாய்மார்களுக்கு உதவுகின்ற ஷேரலைப்பின் நிதிபெறும் நிறுவனங்களில் 1,000க்கும் அதிகமான கமிலா போன்ற உதவிநாடிகளின் புதிய குடும்பங்களுக்கு ஆதரவு கிடைத்தது.

இன்று ஷேர்லைப் ஞாயிறு
உங்கள் தாராள உதவிக்கு நன்றி.

நற்கருணை ஞாயிறு
யூன் 3, 2018

மனநல குழந்தைகளை ஊக்குவித்து நற்செய்தியை வாழ்தல்

7ம் ஆண்டு மாணவனான ஜேக் தனது வகுப்பில் எழுதிய ஒரு கதையினால் அவன் தனக்குத்தானே துன்பம் விளைவிக்ககூடும் என அவரது பாடசாலை அதிபர் கவலைப்பட்டார். அதிபர் அவனது தாயாரை அழைத்து ஷேர்லைப்பின் நிதியுதவி பெறும் யோர்க் பிராந்தியத்தின் கத்தோலிக்க சமூக சேவைகள் ஆலோசகரை சந்திக்குமாறு பரிந்துரைத்தார். முதல் அமர்வின்போது சிறுவன் மிகவும் அமைதியாக இருந்தபோதிலும் இறுதியில் தனது பெற்றோரின் மணமுறிவு பற்றிய தனது துயரத்தையும் குழப்பத்தையும் வெளிப்படுத்தினார். குடும்பத்தை பிரிந்த பிற குழந்தைகள் எவ்வாறு தமது ஏற்புடமை செய்கின்றனர் என்பதை ஆலோசகர் ஒருவர் கூறியபோது அவரது மனவருத்தம் இயல்பானதே என்பதை ஜேக் கண்டுணர்ந்தார். ஜேக் நிம்மதியடையத் தொடங்கினார். ஷேர்லைப்க்கு நன்கொடை கொடுப்பதன் மூலம் நீங்கள் ஜேக் போன்ற குழந்தைகளுக்கு சிகிச்சையும் மகிழ்ச்சியும் பெற உதவுகிறீர்கள்.

தயவு செய்து ஷேர்லைவிற்கு உங்கள் தியாக நன்கொடையை உங்கள் பங்கு ஆலயத்தினூடாகவோ அல்லது இந்த இணையத்தளத்திற்கோ செய்யவும்.
sharelife.org

பொதுக்காலத்தின் பத்தாம் ஞாயிறு
யூன் 10, 2018

இளையோர் தங்கள் வாழ்வை திரும்ப கட்ட உதவுவதன் வழியாக நற்செய்தி வாழ்தல்

சாரா தனது தாயுடன் சேர்ந்துவாழ முடியவில்லை அதனால் அவள் 14 வயதில் தெருவில் வாழ்ந்து கொண்டிருந்தாள். வழிமறி வாகனங்கள் மூலம் ரொரோண்டோ வந்து தனது உறவினருடன் சேர்ந்து சில நாளிலேயே அங்கிருந்து வெளியேற்றப்பட்டாள். செல்ல வேறு இடம் இல்லாததால் புனித மரியா இல்லத்தில் வர முயற்சி செய்தாள். அவர் ஆரம்பத்தில் அவர்களின் அமைப்பையும் விதிகளையும் வெறுத்தாள். இருப்பினும் அங்குள்ளவர்களின் ஆதரவுப்பணியால் அவளது நம்பிக்கையை வென்று அவளைப் பாடசாலைக்கு திரும்புவதற்கு அவர்கள் உதவினார்கள். அங்கு தங்கிய பின்பு அவளது தாயுடன் உறவு திரும்பியது. புனித மரியா இல்லம் போன்ற ஷேர்லைப் நிதிபெறும் நிறுவனங்கள் சாரா போன்ற ஆபத்திலுள்ள இளைஞர்களுக்கு உதவுகின்றன.
தயவு செய்து ஷேர்லைவிற்கு உங்கள் தியாக நன்கொடையை உங்கள் பங்கு ஆலயத்தினூடாகவோ அல்லது இந்த இணையத்தளத்திற்கோ செய்யவும்.
sharelife.org

பொதுக்காலத்தின் பதினோராம் ஞாயிறு
யூன் 17, 2018-01-15

தனிமைப்படுத்தப்பட்ட முதியோர்களுக்கு உதவுவதன் மூலம் நற்செய்தியை வாழ்தல்

கத்தோலிக்க குடும்ப சேவை நிறுவனங்கள் மற்றும் பீல் பிராந்தியத்திலும் சிம்கோ சிறுநகரிலும் உள்ள ஆறு பங்குகளுக்கு தனிமைப்படுத்தப்பட்டு வாழும் முதியோரோடு பயிற்சி பெற்ற தொண்டர்களை இணைக்கும் ஒரு பைலட் திட்டத்திற்கு ஷேர்லைப் நிதியளிக்கின்றது. தொண்டர்கள் வீட்டுக்கு வருகை தரல், தொலைபேசியில் அழைத்தல், சமூக வளங்களோடு மூதியோரை இணைத்து உறவுகளை வளர்த்துக் கொள்ளவும் உதவுகிறார்கள். உங்கள் பெருந்தன்மை மூலம் ஷேர்லைப் மூத்தவர்களுக்கு தேவையான ஆதரவினை வழங்க முடிகிறது.

தயவு செய்து ஷேர்லைவிற்கு உங்கள் தியாக நன்கொடையை உங்கள் பங்கு ஆலயத்தினூடாகவோ அல்லது இந்த இணையத்தளத்திற்கோ செய்யவும்.
sharelife.org

பொதுக்காலத்தின் பன்னிரெண்டாம் ஞாயிறு
யூன் 24, 2018

தேவையில் இருப்போருக்கு கொடுத்து
உதவுவதன் வழியாக நற்செய்தியை வாழ்தல்

“நீங்கள் இல்லாமல் ஷேர்லைப் மற்றவர்களுக்கு உதவுவதன் மூலம் நற்செய்தியினை வாழ முடியாது. நாம் ஒன்றாக இணைந்து ஒரு உண்மையான மாற்றத்தை ஏற்படுத்துகிறோம்! எம்மிலிருந்து விலகி மற்றவர்களுடைய நன்மைகளைத் தேடுவதன்மூலம் கடவுளுடைய அன்பிற்கும் நாம் தொடர்ந்து பதிலளிப்பதே என்னுடைய ஜெபமாகும்

*தோமஸ் கார்டினல் கொலின்ஸ்*
*ரொரோண்டோ மறைமாவட்ட பேராயர்*

தயவு செய்து ஷேர்லைவிற்கு உங்கள் தியாக நன்கொடையை உங்கள் பங்கு ஆலயத்தினூடாகவோ அல்லது இந்த இணையத்தளத்திற்கோ செய்யவும்.
sharelife.org